## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம்–சேலம்

முன்னிலை: திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்

மாவட்ட நீதிபதி

**2026–ஆம் ஆண்டு மார்ச்திங்கள் 30–ஆம் நாள் திங்கள்கிழமை**

திருவள்ளுவர் ஆண்டு 2057 பங்குனித் திங்கள் 16–ஆம் நாள்

**அமர்வு வழக்கு எண். 98/2018**

**CNR No.TNSA01-000224-2018**

ஓமலூர் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்ற PRC.No.16/2016

ஓமலூர் காவல் நிலையக் குற்ற எண். 94/2006

தமிழ்நாட்டு அரசுக்காக
ஓமலூர் காவல் நிலைய
காவல் ஆய்வாளர்,
சேலம் மாவட்டம். ... அரசு தரப்பினர்

**– எதிர் –**

01. பழனிசாமி (30/2006) த/பெ. சின்னதம்பி, (இறந்தார்)
02. கோவிந்தன் (55/2006) த/பெ. பெரியபைய கவுண்டர், சக்கரைசெட்டிப்பட்டி, ஓமலூர் வட்டம்.
03. பெருமாள் (37/2006) த/பெ.சீரங்கன், கரும்பாலை,ஓமலூர் வட்டம். .... எதிரிகள்

*********

| | | |
|---|---|---|
| **காவலறிக்கையில் எதிரிகள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்ற(ம்)ங்கள்** | : | *எதிரிகளுக்கு எதிராக (1) 1908–ஆம் ஆண்டின் வெடிப்பொருட்கள் சட்டத்தின் 04–ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க உயிர் அல்லது உடைமைக்கு ஆபத்தை விளைவிக்க வெடிப்பை ஏற்படுத்த முயற்சிசெய்தல் அல்லது வெடிப்பொருட்களை தயாரித்தல் அல்லது வைத்திருத்தல் குற்றம், (2) அதேச் சட்டத்தின் 05–ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கச் சந்தேகத்திற்குரிய சூழ்நிலை–யில் வெடிமருந்து வைத்திருத்தல் அல்லது தயாரித்தல் குற்றம்.* |
| **எதிரிகளுக்கு எதிராக நீதிமன்றம் வனைந்தக் குற்றச்சாட்டு(க்கள்)** | : | *எதிரிகளுக்கு எதிராக (1) 1908–ஆம் ஆண்டின் வெடிப்பொருட்கள் சட்டத்தின் 04–ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க உயிர் அல்லது உடைமைக்கு ஆபத்தை விளைவிக்க வெடிப்பை ஏற்படுத்த* |

IIIrd ADJ Court, Salem

முயற்சிசெய்தல் அல்லது வெடிப்பொருட்களை தயாரித்தல் அல்லது வைத்திருத்தல் குற்றம், (2) அதேச் சட்டத்தின் 05-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கச் சந்தேகத்திற்குரிய சூழ்நிலை-யில் வெடிமருந்து வைத்திருத்தல் அல்லது தயாரித்தல் குற்றம்.

**குற்றச்சாட்டு(க்கள்)மீது எதிரிகளின் பதிலுரை** : குற்றவாளிகள் இல்லை

**நீதிமன்றத்தின் [குற்றத் தீர்ப்பு அல்லது விடுதலைத் தீர்ப்பு] முடிவு** : எதிரிகள் (1) 1908-ஆம் ஆண்டின் வெடிப்பொருட்கள் சட்டத்தின் 04-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க உயிர் அல்லது உடைமைக்கு ஆபத்தை விளைவிக்க வெடிப்பை ஏற்படுத்த முயற்சி செய்தல் அல்லது வெடிப்பொருட்கள் தயாரித்தல் அல்லது வைத்திருத்தல் குற்றம், (2) அதேச் சட்டத்தின் 05-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கச் சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் வெடிமருந்து வைத்திருத்தல் அல்லது தயாரித்தல் குற்றம் ஆகிய குற்றங்களுக்கான குற்றச்சாட்டுக்கள்மீது தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள் இல்லை.

**தண்டனைத் தீர்ப்பு அல்லது விடுதலை ஆணை** : எதிரிகள் (1) 1908-ஆம் ஆண்டின் வெடிப்பொருட்கள் சட்டத்தின் 04-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க உயிர் அல்லது உடைமைக்கு ஆபத்தை விளைவிக்க வெடிப்பை ஏற்படுத்த முயற்சி செய்தல் அல்லது வெடிப்பொருட்கள் தயாரித்தல் அல்லது வைத்திருத்தல் குற்றம், (2) அதேச் சட்டத்தின் 05-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கச் சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் வெடிமருந்து வைத்திருத்தல் அல்லது தயாரித்தல் குற்றம் ஆகிய குற்றங்களுக்கான குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுதலைச் செய்யப்படுகின்றனர்.

IIIrd ADJ Court, Salem

**காவலறிக்கைமீது** ஓமலூர் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்ற **முதல்நிலைப் பதிவேட்டு வழக்கு எண். 16/2016**-ஆக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப் பட்ட இந்த வழக்குக் குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 209 ஆம் பிரிவின்கீழ் சேலம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் **ஒப்படைக்கப்பட்டு (committed) அமர்வு வழக்காக** கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணைக்காக இந் நீதிமன்றத்திற்கு **மாற்றப்பட்டது(made-over). அமர்வு வழக்குவிசாரணை நடைமுறைகளை** பின்பற்றி விசாரிக்கப்பட்ட இந்த வழக்கு இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது அரசுக்காக குற்றத்துறை வழக்குரைஞர் **திருவாளர் R. மணிகண்டன்** அவர்களும் எதிரிகளுக்காக வழக்குரைஞர் **திருவாளர்P.இளங்கோவன்** அவர்களும் தோன்றி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் காவல் அறிக்கையையும் வழக்கின் பல்வேறு நிலைகளில் எதிரிகளிடம் நீதிமன்றம் வினவியபோது அவர்கள் அளித்த பதில்களையும் ஓர்வுசெய்தும் வழக்கிலுள்ள சான்றுகளை மதிப்பிட்டும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த வழக்கில் இன்று இந் நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது.

## தீர்ப்புரை

### முகவுரை

கடந்த 10.02.2006-ஆம் தேதியன்று சுமார் 12.00 மணியளவில் ஓமலூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட புளியம்பட்டி ஊரில் புல எண் 52-இல் உள்ள புறம்போக்கு நிலத்தில் இருந்த கருங்கற்களை 01-ஆம் எதிரி அரசு அனுமதியின்றி 02-ஆம் எதிரிக்கு சொந்தமான பதிவு எண் TN.27.Y-9100 கொண்ட துளையிடும் மற்றும் வெடிவைக்கும் இழுவையை 03-ஆம் எதிரி மூலம் இயக்கி வெடிவைத்து வெடித்து உடைத்ததாக இந்நீதிமன்றம் குற்றஞ்சுமத்தி 1908 ஆம் ஆண்டின் வெடிப்பொருட்கள் சட்டத்தின் 04-ஆம்,

05-ஆம் பிரிவுகளின்கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றங்களுக்காக எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் வனைந்து வழக்குவிசாரணை நடத்தியுள்ளது.

## அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்

**01.** சேலம் மாவட்டம், ஓமலூர் வருவாய் வட்ட வட்டாட்சியர் மாதையன் ஓமலூர் காவல் நிலையத்தில் 12.02.2006-ஆம் தேதியன்று கொடுத்தப் புகார்மீது அக் காவல் நிலைய குற்ற எண் 94/2006 இல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கைமீது இந்த வழக்கு எழுந்துள்ளது. காவல் அறிக்கை, அத்துடன் தாக்கல்செய்யப்பட்ட ஆவணங்கள், சான்றாளர்களின் வாக்குமூலங்கள் உள்ளிட்டப் பொருள்வகைகள்(**materials**) தெரிவிக்கும் அரசு தரப்பு வழக்குப் பின்வருமாறு.

**02.** நிகழ்நிலைப் புகார்தாரர் மாதையன், ஓமலூர் வட்டாட்சியராக பணிபுரிகிறார். 10.02.2006-ஆம் தேதியன்று அவர் பணியில் இருந்தபோது புளியம்பட்டி ஊரில் நாரணம்பாளையம் பிரிவுப் பகுதியில் புல எண் 52 இல் அடங்கிய குன்றுப் புறம்போக்கு இடத்தில் அரசு அனுமதியின்றி வெடி வைத்து யாரோ கல் உடைப்பதாக பகல் 12.00 மணியளவில் அவருக்குத் தகவல் வந்தது. அவர் மண்டல துணை வட்டாட்சியர் சந்துரு, கருப்பூர் வருவாய் ஆய்வாளர் மகேஷ்வரி, கிராம நிருவாக அலுவலர் மனோகரன், கிராம உதவியாளர் வரதராஜ் ஆகியோருடன் அந்த இடத்திற்கு தணிக்கை செய்யச் சென்றார்.

**03.** நாரணம்பாளையம் ஊரை சேர்ந்தவரும் குள்ளநாயக்கன்பட்டி பெருமாள் கோயில் மேடு என்ற இடத்தில் வசிப்பவருமான சின்னத்தம்பி மகன் பழனிசாமி என்பவர் மேற்சொன்ன புறம்போக்குக் குன்றில் குழித்

தோண்டி வெடிமருந்து வைத்து வெடித்து கற்கலை உடைத்து விற்பது தெரியவந்தது. கற்களில் துளையிட்டு வெடிவைக்கும் வேலையை சக்கரை செட்டிபட்டி ஊரின் ஊராட்சிமன்றத் தலைவர் கோவிந்தனுக்கு சொந்தமான பதிவு எண் TN.27.Y-9100 கொண்ட துளையிடும் மற்றும் வெடிவைக்கும் இழுவை மூலம் கரும்பாலை ஊரை சேர்ந்த சீரங்கன் மகன் பெருமாள் என்பவர் செய்துகொண்டிருந்தார். அங்கு கந்தகம் என்ற வெடிபொருள் ஒவ்வொன்றும் 02 கிலோ எடைகொண்ட 04 பொட்டளங்களும் 16 வெடி தோட்டாக்களும் இருந்தன.

**04.** வட்டாட்சியர் மாதையன் மேற்சொன்ன பொருட்கள் அனைத்தையும் கைப்பற்றி ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கொண்டுவந்தார். மேற்சொன்ன வெடிப்பொருட்கள் எங்கிருந்து வாங்கப்பட்டன என்பதை கண்டறிய உரிய நடவடிக்கை எடுக்குமாறு புகார் எழுதி கைப்பற்றப்பட்டப் பொருட்களையும் புகாரையும் வட்டாட்சியர் அலுவலகத்தின் அலுவலக உதவியாளர் ராஜரத்தினம் என்பவர் மூலம் ஓமலூர் காவல் நிலையத்தில் கொடுத்தார்.

**05.** வட்டாட்சியர் மாதையன் கொடுத்த புகார்மீது அந்தக் காவல் நிலையத்தின் உதவிக் காவல் ஆய்வாளர் தங்கராஜ் அக் காவல் நிலைய குற்ற எண் 94/2006 ல் எதிரிகள்மீது 1908-ஆம் ஆண்டின் வெடிப் பொருட்கள் சட்டத்தின் 04-ஆம், 05-ஆம் பிரிவுகளின்கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றங்களுக்காக வழக்குப் பதிவுசெய்து புலனாய்விற்கு எடுத்துக்-கொண்டார்.

**06.** ஆய்வாளர் தங்கராஜ் வழக்கைப் புலனாய்விற்கு எடுத்துக்கொண்டு புகாருடன் ஒப்படைக்கப்பட்ட கந்தக வெடிமருந்து 8.375 கி.கி, 16

ஜெலட்டின் குச்சிகள் ஆகியவற்றை சான்றாளர்கள் ராஜரத்தினம், தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார். Tractor மற்றும் Compressor ஆகியவற்றை 91-ஆம் படிவத்தில் கைப்பற்றினார்.

**07.** ஆய்வாளர் தங்கராஜ் 13.02.2006-ஆம் தேதியன்று காலை 09.00 மணிக்கு சான்றாளர்கள் வரதராஜன், அபிமன்னன் ஆகியோர் முன்னிலை-யில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டுப் பார்வை மகசரும் மாதிரி வரை படமும் தயாரித்தார். அன்றேச் சான்றாளர்கள் மாதையன், சந்துரு, மகேஷ்வரி, மனோகரன், தேவராஜன், ராஜரத்தினம் பார்வை மகசர் சான்றாளர்கள் வரதராஜன், அபிமன்னன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். வழக்குச் சொத்துக்களை பாதுகாப்பாக வைக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். 15.02.2006-ஆம் தேதியன்று நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் ஆணைப்படி வெடிமருந்துகளை உரிமம் பெற்ற அர்ச்சுணன் என்பவரின் கிடங்கில் பாதுகாப்பாக வைத்தார்.

**08.** எதிரிகளை கைதுசெய்து விசாரிக்க அவர் தேடிவந்த நிலையில் எதிரிகள் அனைவரும் முன்பிணை பெற்றதால் அவர்களை கைதுசெய்ய-வில்லை.

**09.** 06.01.2012-ஆம் தேதியன்று ஆய்வாளர் பாஸ்கரன் இந்த வழக்கை புலனாய்விற்கு எடுத்துக்கொண்டார். வெடிமருந்துகளை செயலிழக்க செய்ய நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அனுமதி வேண்டி வேண்டுகோள் கடிதம் ஒன்றை 29.03.2012-ஆம் தேதியன்று கொடுத்து பின்னிட்டு அனுமதி பெற்று 10.12.2012-ஆம் தேதியன்று வெடிமருந்து நிபுணரான காவல் ஆய்வாளர் வாசுதேவன் மூலம் செயலிழக்கச்செய்து 12.12.2012-ஆம் நாள் சென்னை ஆய்வகத்தில் ஒப்படைத்தார். 13.02.2013-ஆம் நாளன்று வல்லுநர் மஞ்சுளா



IIIrd ADJ Court, Salem

தேவி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து அறிக்கைப் பெற்றார். 02.05.2013-ஆம் தேதியன்று ஓமலூர் வட்டாட்சியருக்கு வேண்டு -கோள் கடிதம் கொடுத்துச் சம்பவ இடம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை பெற்றார். வட்டாட்சியர் அழகிரிசாமியை 03.05.2013-ஆம் தேதியன்று விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார்.

10. 08.06.2013-ஆம் தேதியன்று புலனாய்வில் சேகரிக்கப்பட்டச் சான்றுகளை பரிசீலித்துப் புலனாய்வை முடித்து இந்த வழக்கிற்கான காவல் அறிக்கையை தாக்கல்செய்வதற்கு சேலம் மாவட்ட ஆட்சியரின் அனுமதி கோரி கடிதம் ஒன்றை 08.10.2013-ஆம் தேதியன்று சேலம் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மூலம் அனுப்பினார். 03.09.2013-ஆம் தேதியன்று அனுமதி பெற்று எதிரிகள்மீது 09.09.2013-ஆம் தேதியன்று 1908-ஆம் ஆண்டின் வெடிமருந்துகள் சட்டத்தின் 04-ஆம், 05-ஆம் பிரிவுகளின்கீழ் தண்டிக்கதக்கக் குற்றங்களை சுமத்தி இறுதி அறிக்கைத் தாக்கல்செய்தார்.

## நீதிமன்றம் பின்பற்றிய வலியுறுத்துச் சட்டவகையங்கள்

11. இந்த வழக்கிற்கான காவலறிக்கை ஓமலூர் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் முதல்நிலைப் பதிவேட்டு வழக்காக கோப்பில் எடுக்கப் பட்டுக் குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 209-ஆம் பிரிவின்கீழ் அமர்வு நீதிமன்றத்திடம் **ஒப்படைக்கப்பட்டு(committed)** அமர்வு வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டபின் இந்த நீதிமன்றத்திற்கு **மாற்றப்பட்டு (made-over)** விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிகள் நேர்நின்றதும் அவர்களுக்கு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 207-ஆம் பிரிவின்படி காவல் அறிக்கையின் நகல்கள் நீதித்துறை நடுவர்

நீதிமன்றத்தில் இலவசமாக வழங்கப்பட்டன என்பதை இந் நீதிமன்றம் உறுதிசெய்தது. இலவசச் சட்ட உதவி குறித்து எதிரிகளிடம் விளக்கியபோது வழக்குரைஞர் அமர்த்த வசதியுள்ளது என்று கூறி சொந்தச் செலவில் வழக்குரைஞரை அமர்த்திக்கொண்டனர்.

12. குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 226-ஆம் பிரிவின்கீழ் அரசு தரப்பையும் 227-ஆம் பிரிவின்கீழ் எதிரிகள் தரப்பையும் கேட்டபின் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கான முகாந்திரமிருப்பது இந் நீதிமன்றத்திற்கு தெரியவந்தது. எதிரிகளுக்கு எதிராக (1) 1908-ஆம் ஆண்டின் வெடிப்பொருட்கள் சட்டத்தின் 04-ஆம் பிரிவின்-கீழ் தண்டிக்கத்தக்க உயிர் அல்லது உடைமைக்கு ஆபத்தை விளைவிக்க வெடிப்பை ஏற்படுத்த முயற்சிசெய்தல் அல்லது வெடிப்பொருட்களை தயாரித்தல் அல்லது வைத்திருத்தல் குற்றம், (2) அதேச் சட்டத்தின் 05-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கச் சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் வெடிமருந்து வைத்திருத்தல் அல்லது தயாரித்தல் குற்றம் ஆகிய குற்றங்களை சுமத்திக் குற்றச்சாட்டுக்கள் வனைந்து எதிரிகளுக்கு புரியும்படி விளக்கிக்கூறி வினவியது. அரசு தரப்புச் சான்றுகள் முடிந்ததும் குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 313-ஆம் பிரிவின் வலியுறுத்தத்திற்கு இணங்க அச் சான்றுகளில் எதிரிகளுக்கு எதிராக இருந்தச் சான்றுகள் குறித்து இந் நீதிமன்றம் எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியது.

### எதிரிகள் தரப்பு எதிர்வாதம்

13. காவலறிக்கையிலும் அத்துடன் தாக்கல்செய்யப்பட்டுள்ள ஏனைய பொருள்வகைகளிலும்(material)பொதிந்துள்ள எதிரிகள்மீது குற்றஞ்சுமத்தும்

அம்சங்கள் யாவும் பொய் என்றும் எதிரிகள் குற்றவாளிகளில்லை என்றும் முன்விசாரணையின்போது(**pretrial inquiry**) எதிரிகள் கூறினர். இந்த நீதிமன்றம் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் வனைந்து அவர்களுக்குப் புரியும்படி விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்துத் தாங்கள் குற்றவாளிகளில்லை என்று கூறினர். அரசு தரப்புச் சான்றுகள் முடிந்தபின் அவற்றில் எதிரிகளுக்கு எதிராக உள்ள அம்சங்கள் பற்றி நீதிமன்றம் எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியபோது அவை யாவும் பொய் என்று மறுத்துள்ளனர். வழக்குச் சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் எதிரிகளுக்கு எதிராக பொய் வழக்குப் புனையப்பட்டுள்ளது என்றும் எதிரிகள் தரப்பில் வாதிட்டனர்.

### சான்றுகள்

14. காவல் அறிக்கையுடன் தாக்கல்செய்யப்பட்டுள்ள சான்றாளர்கள் பட்டியலில் 15 சான்றாளர்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் வருவாய் ஆய்வாளர் மகேஸ்வரி, புலனாய்வு அதிகாரி உட்பட மொத்தம் 07 சான்றாளர்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். முதல் தகவல் அறிக்கை உட்பட மொத்தம் 13 சான்றாவணங்கள் குறியீடுச் செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் 02 சான்றுப் பொருள்கள் குறியீடுச் செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் எதிரிகளையோ வேறு யாரையுமோ சான்றாளராக விசாரிக்க வில்லை. சான்றாவணங்கள் எதையும் குறியீடுச் செய்யவில்லை.

### தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

**15. எதிரிகள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஐயமற நிரூபிக்கப்பட்டுள்ளனவா? எதிரிகள்மீது சுமத்தப்பட்டக் குற்றச்சாட்டுக்களின்மீது அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களா?**

## தீர்முடிவு

16. கடந்த 10.02.2006-ஆம் தேதியன்று சுமார் 12.00 மணியளவில் ஓமலூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட புளியம்பட்டி ஊரில் புல எண் 52-இல் உள்ள புறம்போக்கு நிலத்தில் இருந்த கருங்கற்களை 01-ஆம் எதிரி அரசு அனுமதியின்றி 02-ஆம் எதிரிக்கு சொந்தமான பதிவு எண் TN.27 Y-9100 கொண்ட துளையிடும் மற்றும் வெடிவைக்கும் இழுவையை 03-ஆம் எதிரி மூலம் இயக்கி வெடிவைத்து வெடித்து உடைத்ததாகவும் அதனால் எதிரிகள் 1908-ஆம் ஆண்டின் வெடிப்பொருட்கள் சட்டத்தின் 04-ஆம், 05 ஆம் பிரிவுகளின்கீழ் தண்டிக்கத்தக்கக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள் என்றும் அரசு தரப்பில் வாதிட்டனர்.

17. அரசு தரப்பு வழக்கில் கண்டுள்ளதுபோல் எந்தச் சம்பவமும் நடக்கவில்லை என்றும் எதிரிகள்மீது பொய் வழக்குப் புனையப்பட்டுள்ளது என்றும் எதிரிகள் தரப்பில் எதிர்வாதம் புரிந்தனர்.

18. அரசு தரப்பு வழக்கு உரிய சான்றுகள் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளதா? என்று அரசு தரப்பில் முன்னிட்டுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சான்றுகளை ஆய்ந்து முடிவுசெய்ய வேண்டும். வட்டாட்சியர் மாதையன், மண்டல துணை வட்டாட்சியர் சந்துரு, வட்டாட்சியர் அலுவலக இளநிலை உதவியாளர் ராஜரத்தினம், கிராம நிருவாக அலுவலகர் மனோகரன் ஆகியோர் இறந்துவிட்டனர் என்று அரசு தரப்பில் கூறினர்.

19. நிகழ்நிலைப் புகார்தாரர் மாதையன் இறந்துவிட்ட நிலையில் வழக்குச் சம்பவ இடத்திற்கு அவருடன் சென்றவர்களில் ஒருவருமான மகேஸ்வரி(**அ.சா-01**) பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார். நான் கடந்த

10.02.2006 ஆம் தேதியன்று சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில் கருப்பூர் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்தேன். புளியம்பட்டி, நாரணம்பாளையம் பிரிவு சாலையில் உள்ள அரசு புறம்போக்கு இடத்தில் சட்டவிரோதமாக வெடிமருந்து வைத்து கல் உடைப்பதாக புகார் வந்திருப்பதாகவும் அதனால் திடீர் தணிக்கை மேற்கொள்ள அந்த இடத்திற்கு செல்ல வேண்டும் என்றும் ஓமலூர் வட்டாட்சியர் பகல் 11.00 மணிக்கு தொலைபேசியில் தகவல் சொன்னார். நான் அந்த தகவலை கோட்டகவுண்டம் பட்டி கிராம நிருவாக அலுவலருக்கும் கிராம உதவியாளருக்கும் சொன்னேன். வட்டாட்சியர், மண்டல துணை வட்டாட்சியர், நான், அலுவலக உதவியாளர் ஆகியோர் வட்டாட்சியரின் வாகனத்தில் புளியம்பட்டிக்கு சென்றோம். அங்கு கிராம நிருவாக அலுவலரும் உதவியாளரும் வந்தனர். அனைவரும் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு குழி தோண்டும் எந்திரம் வைத்து ஓட்டை போட்டுக்கொண்டிருந்தார்கள்.அந்த வாகனத்தின் பதிவு எண்.TN.27-Y-9100 ஆகும். அங்கு பெருமாள் என்பவர் துளை போட்டுக்கொண்டிருந்தார். அவர் மேற்சொன்ன எந்திரத்தை இயக்குபவர் என்று சொன்னார். அந்த எந்திரம் சக்கரைசெட்டிபட்டி ஊராட்சிமன்றத்தின் தலைவராக அப்போது இருந்த கோவிந்தனுக்கு சொந்தமானது என்று தெரியவந்தது. அந்த எந்திரத்தை வைத்து கல் உடைத்து விற்றவர் பழனிசாமி என்று தெரியவந்தது. அங்கு 4 பொட்டலங்களில் வெடிமருந்துகள் இருந்தன. வெடிதோட்டா 16 இருந்தது. அந்த எந்திரம், வெடிமருந்து பொட்டலங்கள், தோட்டா ஆகியவற்றை வட்டாட்சியர் கைப்பற்றினார். அவற்றை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எடுத்துச் சென்றோம். அது சம்மந்தமாக அறிக்கை தயாரித்து மறுநாள் 11 ஆம் தேதி காவல் நிலையத்திற்கு சட்ட நடவடிக்கை எடுக்க அனுப்பினார். மாதையன் உயிரோடில்லை. அவருடன் நான் பணிபுரிந்ததால் அவருடைய

IIIrd ADJ Court, Salem

கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். இந்த நடவடிக்கை முழுக்க நானும் வட்டாட்சியருடன் இருந்தேன் என்று கூறியுள்ளார்.

20. சான்றாளர் தேவராஜன்(**அ.சா-02**) பின்வருமாறு சாட்சியமளித்துள்ளார். நான் தற்போது சேலம் மாவட்டம், ஓமலூர், புளியம்பட்டியில் வசிக்கிறேன். நான் கூலி வேலைசெய்கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரிகளை எனக்குத் தெரியாது. பழனிசாமி என்பவரையும் தெரியாது. நாரணம்பாளையம் பிரிவு சாலையில் குவாரி உள்ள இடத்தில் கூட்டமாக இருந்தார்கள். என்னவென்று பார்க்க நானும் சென்றேன். அங்குக் காவல் நிலையத்தினர் என் பெயர் விலாசத்தைக் கேட்டு எழுதிக்கொண்டனர். வேறு எதுவும் எனக்குத் தெரியாது என்று கூறியுள்ளார்.

21. சான்றாளர் வரதராஜன்(**அ.சா-03**) பின்வருமாறு சாட்சியமளித்துள்ளார். நான் ஓமலூர் கோட்டமேட்டுப்பட்டி பிரிவில் வசிக்கிறேன். சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தபேதராக பணிபுரிகிறேன். 2006 ஆம் ஆண்டு ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்தேன். 2006 ஆம் ஆண்டு ஒரு நாள் வட்டாட்சியர் அழைத்ததன் பேரில் அவருடைய வாகனத்தில் புளியம்பட்டி ஊருக்கு அருகிலுள்ள ஓர் இடத்திற்கு சென்றோம். 30 அடிக்குமுன் வாகனம் நின்றது. நீங்கள் இங்கேயே நில்லுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றார். ஒரு மணிநேரம் கழித்து வந்தார். காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் என்ற ஆவணத்தில் என் கையொப்பம் உள்ளது. அந்தக் கையொப்பத்தை எங்கு வைத்து போட்டேன் என்றும் எதற்காக போட்டேன் என்றும் எனக்கு நினைவில்லை என்று கூறியுள்ளார்.

22. சான்றாளர் அபிமன்னன்(**அ.சா-04**) பின்வருமாறு சாட்சியமளித்துள்ளார். கிராம உதவியாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று புளியம்பட்டி ஊரில் வசிக்கிறேன். 2006-ஆம் ஆண்டு சம்பவ இடத்தில் வெடிவைத்து பாறை உடைத்ததாக கேள்விப்பட்டு வட்டாட்சியரிடம் புகார் கொடுக்கச் சென்றேன். நான் அங்கு சென்றபோது வட்டாட்சியர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். ஒருமணி நேரம் கழித்து நான் வந்தேன். தகவல் கொடுக்கவில்லை என்று என்னை பணியிடை நீக்கம்செய்து ஆணையை கொடுத்தார். சம்பவ இடத்திற்கு நான் வந்தபோது வருவாய் ஆய்வாளர் இருந்தார். அவர் வட்டாட்சியரை பார்க்குமாறு சொன்னார். இதுச் சம்மந்தாக காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் என்ற ஆவணத்தில் உள்ள இரண்டாம் கையெழுத்து என்னுடையது. வட்டாட்சியர் அலுவலகத்தில் கையொப்பம் கேட்டார்கள். போட்டேன். பணியிடை நீக்கம் செய்வதற்குமுன் கேட்டார்கள். போட்டேன் என்று கூறியுள்ளார்.

23. சான்றாளர் தங்கராஜ்(**அ.சா-05**) பின்வருமாறு சாட்சியமளித்துள்ளார். நான் ஓமலூர் வட்டம், கோட்டகவுண்டபட்டி ஊரில் வசிக்கிறேன். நான் ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இரவுக் காவலராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். சுமார் 20 ஆண்டுகளுக்குமுன் ஒரு நாள் நான் இரவு பணிக்குச் சென்றபோது துணை வட்டாட்சியர் ஒரு மூட்டையை கொடுத்து காவல் நிலையத்தில் வைத்துவிட்டு வருமாறு சொன்னார். நானும் எழுத்தர் ராஜா என்பவரும் அந்த மூட்டையை காவல் நிலைத்தில் கொடுத்துவிட்டு வந்தோம். அவற்றை காவல் துறையினர் மகசரில் கைப்பற்றினார். அதில் நானும் ராஜாவும் சான்றொப்பம் இட்டோம் என்று கூறியுள்ளார்.

24. சான்றாளர் அழகிரிசாமி(**அ.சா-06**) பின்வருமாறு சாட்சியமளித்-துள்ளார். நான் வாட்டாட்சியராக பணிபுரிந்து 2024-ஆம் ஆண்டு ஓய்வு பெற்று சேலத்தில் வசிக்கிறேன். நான் 2013-2014 ஆம் ஆண்டில் ஓமலூர் வருவாய் வட்டத்தில் வட்டாட்சியராக பணிபுரிந்தேன். எதிரிகளை எனக்குத் தெரியாது. எங்கள் வட்டத்தில் புளியம்பட்டி என்ற ஊர் உள்ளது. அந்த ஊர் புல எண் 52 அரசு புறம்போக்கு நிலம் ஆகும். அதன் பரப்பளவு 2.38.00 ஹெக்டேர் ஆகும். ஓமலூர் காவல் ஆய்வாளர் இதுச் சம்மந்தமாக சான்று கேட்டார் நான் கொடுத்தேன் என்று கூறியுள்ளார்.

25. காவல் அறிக்கைத் தாக்கல்செய்த பாஸ்கரன்(**அ.சா-07**) சொல்லியுள்ள சாட்சியத்தில் ஆய்வாளர் தங்கராஜ் முதல்கட்ட புலனாய்வுசெய்தது குறித்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். அவர் வழக்கை புலனாய்விற்கு எடுத்துக்கொண்டு வெடிமருந்துகளை செயலிழக்கச்செய்து அறிக்கைப் பெற்று மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று இறுதியறிக்கைத் தாக்கல்செய்ததாக கூறியுள்ளார்.

26. அரசு தரப்பு வழக்குப்படி ஓமலூர் வட்டாட்சியர் சம்பவ இடத்திற்கு சென்ற நேரம் 10.02.2006-ஆம் தேதியன்று பகல் 12.00 மணி ஆகும். ஆனால் புகார் 12.02.2006-ஆம் தேதியன்று 22.30 மணிக்குதான் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகமும் காவல் நிலையமும் ஒரே வளாகத்தில் உள்ளது என்பதை புலனாய்வு அதிகாரி மறுக்கவில்லை. 10.02.2006-ஆம் தேதியன்று பகல் 12.00 மணியளவில் சம்பவ இடத்தில் TN.27-Y.9100 கொண்ட துளையிடும் மற்றும் வெடிவைக்கும் இழுவை, கந்தகம் வெடிபொருள் ஒவ்வொன்றும் 02 கிலோ எடைகொண்ட 04 பொட்டலங்களும் 16 வெடி தோட்டாக்கள் கைப்பற்றப்பட்ட நிலையில் ஏன்

அவற்றை வட்டாட்சியர் காவல் நிலையத்தில் உடனடியாக ஒப்படைத்து புகார் கொடுக்கவில்லை என்று தெரியவில்லை. மேலும் சம்பவ இடத்தில் 03 ஆம் எதிரி பெருமாள் வெடிமருந்து வைத்து வெடித்துக்கொண் டிருந்ததாக சொல்லும் வட்டாட்சியர் ஏன் அவரை கையோடு அழைத்துச் சென்று காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்பதற்கு அரசு தரப்பில் காரணம் எதையும் சொல்லவில்லை.

**27.** சம்பவ இடத்தில் சட்ட விரோதமாக கல் உடைத்தவர் என்று சொல்லப்படும் பழனிசாமி இறந்துவிட்டார். இந்த வழக்கின் 02-ஆம் எதிரி கோவிந்தன் TN.27-Y.9100 கொண்ட துளையிடும் மற்றும் வெடிவைக்கும் இழுவையின் உரிமையாளர் என்ற சொல்லப்படுகிறார். அந்த இழுவை 02 ஆம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்று காட்டும் சான்று எதையும் அரசு தரப்பில் இந்த வழக்கில் தாக்கல்செய்யவில்லை. 03-ஆம் எதிரி பெருமாள் மேற்சொன்ன வாகனத்தை ஓட்டினார் என்று காட்டும் சான்றுகள் எதுவும் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகில் அனுமதி பெற்ற கல் உடைக்கும் குவாரி நடக்கிறது என்ற சங்கதியை அரசு தரப்பு சான்றாளர்கள் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளனர். புகார் கொடுக்கப்பட்டதில் உள்ள தாமதம் உண்மையில் சம்பவ இடத்தில் கல் உடைத்தது யார் என்ற ஐயத்தையும் வழக்குச் சம்பவத்தோடு எதிரிகள் சம்மந்தப்பட்டிருப்பார்களா என்ற ஐயத்தையும் தோன்றுவிக்கிறது என்று இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகையால், எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு வழக்கு ஐயமற நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரிகள் அவர்களுக்கு எதிரான குற்றச்-சாட்டுக்கள்மீது தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகளில்லை என்றும் இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

## இறுதிமுடிவு

28. இறுதியாக, 02-ஆம், 03-ஆம் எதிரிகள் (1) 1908-ஆம் ஆண்டின் வெடிப்பொருட்கள் சட்டத்தின் 04-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க உயிர் அல்லது உடைமைக்கு ஆபத்தை விளைவிக்க வெடிப்பை ஏற்படுத்த முயற்சி செய்தல் அல்லது வெடிப்பொருட்களை தயாரித்தல் அல்லது வைத்திருத்தல் குற்றம், (2) அதேச் சட்டத்தின் 05-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க சந்தேகத் -திற்குரிய சூழ்நிலையில் வெடிமருந்து வைத்திருத்தல் அல்லது தயாரித்தல் குற்றம் ஆகிய குற்றங்களுக்கான குற்றச்சாட்டுக்கள்மீது தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள் இல்லை என்று முடிவுசெய்து மேற்சொன்ன குற்றச்சாட்டிலிருந்து அவர்களை விடுதலைச் செய்து **(கு.வி.ந.தொ.ச.235(1)-ஆம் பிரிவுபடி)** ஆணையிட்டு இந்த வழக்கில் இன்று இந்த நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது. 01-ஆம் எதிரி இறந்துவிட்டதால் அவர்மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.

## வழக்குச் சொத்துக்கான தீர்முடிவு

29. இந் நீதிமன்ற வழக்குச் சொத்ததான**(சா.பொ-01)** நிழற்படத்தை வழக்குக் கோப்பில் சேர்க்கவும் வழக்குச் சொத்தான**(சா.பொ-02)** பதிவு எண் **TN27Y9100** கொண்ட இழுவை அதன் உரிமையாளர் வசம் இடைக்கால பொறுப்பில் கொடுக்கப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டுக் காலத்திற்குபின் அவரே வைத்துக்கொள்ளவும் இந் நீதிமன்றம் ஆணையிடுகிறது.

III ADJ Court, Salem

**இந்தத் தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு மார்ச்திங்கள் 30–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V Date: 2026.03.30 19:24:00 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

IIIrd ADJ Court, Salem

## அரசு தரப்புச் சான்றாளர்கள்

| | |
|---|---|
| **அ.சா-01** | மகேஸ்வரி |
| **அ.சா-02** | தேவராஜன் |
| **அ.சா-03** | வரதராஜன் |
| **அ.சா-04** | அபிமன்னன் |
| **அ.சா-04** | தங்கராஜ் |
| **அ.சா-06** | அழகிரிசாமி |
| **அ.சா-07** | பாஸ்கரன், காவல் ஆய்வாளர் |

## அரசு தரப்புச் சான்றாவணங்கள்

| | |
|---|---|
| **அ.சா.ஆ-01** | புகார் |
| **அ.சா.ஆ-02** | பார்வை மகசரில் முதலாவதாக உள்ள அ.சா.03-இன் கையெப்பம் |
| **அ.சா.ஆ-03** | பார்வை மகசரில் இரண்டாவதாக உள்ள அ.சா.04-இன் கையெப்பம் |
| **அ.சா.ஆ-04** | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.சா.05-இன் கையெப்பம் |
| **அ.சா.ஆ-05** | அடங்கல் கணக்கு |

**அ.சா.ஆ-06** புலப்படம்

**அ.சா.ஆ-07** அ பதிவேடு

**அ.சா.ஆ-08** அறிக்கை

**அ.சா.ஆ-09** முதல் தகவல் அறிக்கை

**அ.சா.ஆ-10** கைப்பற்றுதல் மகசர்

**அ.சா.ஆ-11** படிவம் 91

**அ.சா.ஆ-12** பார்வை மகசர்

**அ.சா.ஆ-13** வரைபடம்

**சான்றுப் பொருள்கள் :-**

**அ.சா.பொ.-01** நிழற்படம்

**அ.சா.ஆ-02** பதிவு எண் **TN27Y9100** கொண்ட **LMV FORD** கம்ப்ரஷருடன் கூடிய டிராக்டர்

**எதிரிகள் தரப்புச் சான்றாளர்கள் – இல்லை**

**எதிரிகள் தரப்புச் சான்றாவணங்கள் - இல்லை**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.03.30 19:24:12 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

| வரைவு/உண்மை தீர்ப்புரை | |
|---|---|
| அ.வ.எண். | 98/2018 |
| நாள் | 30.03.2026 |

IIrd ADJ Court, Salem